
கல்விப் பொதுத் தராதர பத்திர உயர்தர உதவும் கருத்தரங்கு 2013

பொருளியல் 11 புள்ளியியல் திட்டம்

கல்வி அமைச்சின் வழிகாட்டலின் கீழ் தயாரிக்கப்பட்டது

1) I. அ) நிலம்
ஆ) மூலதனம்
இ) உழைப்பு
ஈ) முயற்சியாண்மை (4 புள்ளி)

II.





(2 புள்ளி)

(ஆ) வளங்களான இயலபாவது அவை ஓரானமானதாக இலலாமை

- கைத்தொழில் பண்டங்களை உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் வளங்கள் அதே விளைதிறனுடன் விவசாயப் பண்ட உற்பத்திக்காகப் பயன்படுத்த முடியாமையாகும்.
- உற்பத்தி நுட்பமுறைகள் ஒன்றுக்கொன்று வேறுபடல், கைத்தொழில் பண்டத்தை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும் நுட்ப முறைகள் அதே விதமாகவே விவசாயப் பண்ட உற்பத்திக்குப் பயன்படுத்த முடியாதவையாகும். (2ற்கு 2 புள்ளி)

இ) 30 கைத்தொழில் பண்டங்களை உற்பத்தி செய்யும்போது விவசாயப் பண்டங்கள் 70 ஐ மட்டுமே உற்பத்தி செய்ய முடியும். கைத்தொழில் பண்டங்கள் 30 மற்றும் விவசாயப்பண்டங்கள் 85 ஐ கொண்ட இணைப்பைத் தற்போது உற்பத்தி செய்ய முடியாது. அதற்கான காரணம் வளப்பற்றாக்குறை ஆகும்.




(2 புள்ளி)

ஈ) இல்லை உற்பத்தி இயலளவு உயர்வடைகின்றபோது உற்பத்தி செய்யக்கூடிய பண்டங்களின் அளவு குறிப்பிட்ட அளவினால் அதிகரிக்க முடியுமெனினும் அதற்குச் சார்பாக மனிதத் தேவைகள் வேகமாக அதிகரிக்கும். அவ்வாறு அதிகரித்த மனிதத் தேவைகளை நிறைவேற்றுகின்ற அளவுக்கு வளங்கள் போதுமானதாக இல்லாமை காரணமாக அருமை தொடர்பான பிரச்சினை மேலும் மேலும் தீர்க்கப்படாததாகவே காணப்படும் (2 புள்ளி)

III. சமிஞ்சைகளை வெளியிடல்
பங்கீட்டுமுறைமை
ஊக்குவிப்பு வழங்குதல்

iv. சுயநல நோக்கில் நடவடிக்கை மேற்கொள்கின்ற சந்தைப் பொருளாதாரம் எப்போதும் விலைப் பொறிமுறையின் வழிகாட்டலின்படி செலவை இழிவுபடுத்துகின்ற நுட்பமுறை தெரிவு செய்யப்படுகிறது, அப்போது சார்புக் காரணி விலைகள் கவனத்திற் கொள்ளப்பட்டு காரணிச் சேர்க்கை தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்படுகிறது.

சமூக நலனை நோக்கில் நடவடிக்கை மேற்கொள்கின்ற சந்தைப் பொருளாதாரம் எப்போதும் விலைப் பொறிமுறையின் வழிகாடட்டலின்படி செலவை இழிவு படுத்துகின்ற நுட்பமுறை தெரிவு செய்யப்படுகிறது. அப்போது சார்புக் காரணி விலைகள் கவனத்திற் கொள்ளப்பட்டு காரணிச் சேர்க்கை தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்படுகின்றது.

சமூக நலனை நோக்கமாகக் கொண்டு நடவடிக்கை மேற்கொள்கின்ற திட்டமிடற் பொருளாதாரம் திட்டமிடல் பொறிமுறையின் வழிகாட்டலின்படி உற்பத்தி நுட்பமுறையைத் தெரிவு செய்கின்றது. அப்போது பொருளாதாரத்தின் வேலையின்மை விகிதம் உற்பத்திச் செலவு எதிர்காலத்துக்காக வளங்களை ஒதுக்குதல் ஆகிய காரணிகளைக் கவனத்திற் கொண்டு சமூக நலனை உச்சப்படுதுகின்ற நுட்பமுறை தெரிவு செய்யப்படுகிறது.

கலப்புப் பொருளாதாரமொன்றில் தனியார் துறையினர் சந்தைச் சக்திகளின் அடிப்டையிலும் அரசதுறை திட்டமிடல் செயற்பாட்டின் அடிப்படையிலும் உற்பத்தி நுட்பமுறையினைத் தெரிவுசெய்யும் பிரச்சினை தீர்க்கப்படுகிறது. (3 புள்ளி)

v. சந்தைப் பொருளாதாரமொன்று செயற்திறன் மிக்கதாக அமைவது பின்வரும் நிலைமைகளிலாகும்

1. வளப்பங்கீட்டில் செயற்திறனின்மை / சந்தைத் தோல்வி

2. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் / வருமானப் பங்கீட்டில் ஏற்றதாழ்வு

3. பொருளாதார உறுதியின்மைகள் ஏற்படுதல்

2) i. தரப்பட்ட ஒரு குறித்த நேரத்தில் நிரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் ஏனைய காரணிகள் மாறாத நிலையில் குறித்த பண்டத்தின் விலைக்கும் நிரம்பல் தொகைக்கும் இடையில் ஒரு நேராக தொடர்பு காணப்படுகிறது என்பதை நிரம்பல் விதி விலக்குகிறது. (2 புள்ளி)

நிரம்பல்கோடு மேல்நோக்கி நகர்வது இரண்டு காரணங்களினால் ஆகும்


1. இலாபம் :- ஏனைய காரணிகள் மாறாத நிலையில் குறிப்பிட்ட பண்டத்தின் விலை அதிகரிக்கும்போது இலாபம் உயர்வடைவதால் புதிய நிரம்பலாளர்கள் சந்தைக்குள் பிரவேசித்தல் மற்றும் ஏனைய காரணிகள் மாறாத நிலையில் குறிப்பிட்ட பண்டத்தின் விலை குறையும்போது இலாபங்கள் குறைவடைவதால் நிரம்பலாளர்களில் ஒரு பகுதியினர் சந்தையை விட்டு வெளியேறல்.
2. கூடிச் செல்லும் அமையச் செலவு :- நிரம்பல்தொகை அதிகரிக்கும்போது எல்லைச் செலவு அதிகரிக்கின்றது. எனவே நிரம்பல் தொகையை அதிகரிக்க முடியுமாக இருப்பது அதிகரிக்கும் விலைகளின் கீழாகும். (1 விடயத்திற்கு 1 வீதம் 2 புள்ளி)

ii. விலை 10 ரூபாவில் நிரம்பல் தொகை

மிகைநிரம்பல் தொகை = நிரம்பல் தொகை – கேள்வித் தொகை
-- 1000 = நிரம்பல் தொகை -- 1000
--1000 +1000 = நிரம்பல் தொகை
0 = நிரம்பல் தொகை

விலை 40 ரூபாவில் நிரம்பல் தொகை

மிகைநிரம்பல் தொகை = நிரம்பல் தொகை – கேள்வித் தொகை
200 = நிரம்பல் தொகை -- 400
200 + 400 = நிரம்பல் தொகை
600 = நிரம்பல் தொகை




அ. சமநிலை விலை ரூபா 35

சமநிலை தொகை 500 (1 விடயத்திற்கு 1 வீதம் 2 புள்ளி)

ஆ. மானியத்தின் அளவினால் நிரம்பல் கோடு S இலிருந்த S1 இற்கு வலப்புறமாக நகர்கிறது.

(1) புதிய சமநிலை விலை 30 ரூபா சமநிலைத் தொகை 600 அலகுகள்
(1 விடயத்திற்கு 1 வீதம் 2 புள்ளி)

மானியத்திற்கு முன்னர் நுகர்வோன் மிகை } $\frac{(\text{ஆகக்கூடிய கேள்வி விலை} - \text{சமநிலை விலை}) X}{2}$ சமநிலை தொகை

$\frac{(60 - 35)\ 500}{2}$

= 6250 (1 புள்ளி)

மானியத்தின் பின்னர் நுகர்வோன் தொகை } $= \frac{(60-35)}{2}$ 600

= 9000 (1 புள்ளி)

iii. மானியத்துக்கு முன்னர் உற்பத்தியாளன் மிகை = $\frac{\{\text{உற்பத்தியாளனுக்கு கிடைக்கும்விலை} - \text{ஆகக்குறைந்த நிரம்பல்விலை}\}\ \text{சமநிலைத் தொகை}}{2}$

$$\frac{(35-10)500}{2}$$

= 6250 (1 புள்ளி)

மானியத்தின் பின்னர் உற்பத்தியாளன் மிகை $= \frac{(40-10)600}{2}$

= 9000 (1 புள்ளி)

iv. மானியத்தின் காரணமாக அரசாங்கம் தாங்கும் செலவு = அலகுக்கான மானியம் X விற்பனை செய்யப்படும் தொகை

= 10X600

= 6000

(v) மானியம் காரணமாக இழக்கப்படும் சமூக நலன் = மானியத்துக்காக அரசாங்கம் தாங்கும் செலவு – அதிகரித்த பொருளாதார மிகை

= 6000 – 5000

= 500

III. விலைக்கேள்வி நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகள்

- குறிப்பிட்ட பண்டத்துக்கு காணப்படும் பிரதியீடுகளின் தொகை
- குறிப்பிட்ட பண்டத்தினால் கிடைக்கின்ற பயன்பாடுகளின் அளவு
- குறிப்பிட்ட பண்டம் வரைவிலக்கணப்படுத்துள்ள விதம்
- குறிப்பிட்ட பண்டத்துக்காக வருமானத்திலிருந்து செலவிடப்படுதம் சதவீதம்
- குறிப்பிட்ட பண்டம் அத்தியாவசியமானதா / அத்தியாவசியமற்றதா என்பது
- குறிப்பிட்ட பண்டத்தின் விலை குறைந்நத பின்னர் சென்றுள்ள காலம்

(ஒரு விடயத்துக்கு 1 புள்ளி வீதம் 3 புள்ளி)

IV. காரணி விற்பனையினால் கிடைக்கும் வருமானத்தினுள் இருவகையான வருமான உழைப்புக்கள் உள்ளடங்கியுள்ளன.


- மாற்றல் கட்டணம் - இருக்கின்ற பயன்பாட்டினுள் மேலும்` மேலும் காரணிகளைப் பயன்படுத்துவதற்காக காரணி உரிமையாளர்கள் எதிர்பார்க்கப்படுகின்ற ஆகக் குறைந்த காரணி உழைப்புத் தொகை
- பொருளாதார வாடகை - மாற்றல் உழைப்பையும் தாண்டி பெறப்படுகின்ற காரணி வருமானத் தொகை


(1 புள்ளி)

பொருளியல் வாடகையின் தொகை - காரணி நிரம்பல் நெகிழ்ச்சியின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது.

காரணி நிரம்பல் பூரண நெகிழ்வுள்ளதாயின் காரணி விற்பனையினால் கிடைக்கின்ற மொத்த வருமானமும் மாற்றல் கட்டணமாகும்.

காரணி நிரம்பல் பூரண நெகிழ்வுள்ளதாயின் காரணி விற்பனையினால் கிடைக்கும் மொத்த வருமானமும் பொருளியல் வாடகையாகும்.




(2புள்ளி)

(3) i) குறைந்து செல்லும் விளைவு என்பது

குறுங்கால உற்பத்திச் செயற்பாட்டின் போது நிலையான காரணியுடன் இணைக்கப்படுகின்ற மாறும் காரணியின் எல்லை உற்பத்தியும் சராசரி உற்பத்தியும் குறிப்பிட் ஒரு மட்டத்தின் பின்னர் குறைந்து செல்வதாகும். (2 புள்ளி)

குறைந்து செல்லும் அளவுத்திட் விளைவு என்பது

நீண்ட காலத்தில் உற்பத்திச் செயற்பாட்டில் உள்ள சகல உள்ளீடுகளையும் குறிப்பிட்ட ஒரு சதவீதத்தினால் அதிகரிக்கும் போது அதைவிடக் குறைந்த சதவீதத்தில் உற்பத்தி அதிகரிப்பதாகும்.

ii) அ. கணக்கீட்டு இலாபம் என்பது மொத்த வருமானத்திலிருந்து நேரடிச் செலவுகளை மட்டும் கழித்த பின்னர் கிடைக்கின்ற பெறுமதியாகும்.

கணக்கீட்டு இலாபம் = மொத்த வருமானம் - நேரடிச் செலவுகள் (1 புள்ளி)

பொருளாதார இலாபம் என்பது மொத்த வருமானத்திலிருந்து நேரடிச் செலவுகளையும் மறைமுக செலவுகளையும் கழித்த பின்னர் கிடைக்கின்ற பெறுமதியாகும்.

பொருளாதார இலாபம் = மொத்த வருமானம் - (நேரடிச் செலவுகள் +மறைமுக செலவுகள்)

கணக்கீட்டு இலாபத்திலிருந்து பொருளாதார இலாபம் வேறுபடுத்துவது மறைமுக செலவுகளின் காரணத்தினாலாகும்.

ஆ. சாதாரண இலாபம் என்பது முயற்சியாளனொருவன் உற்பத்திச் செயற்பாட்டினுள் ஈடுபடுவதற்காக அதாவது உற்பத்திச் செயற்பாட்டை ஒழுங்குபடுத்தல் மற்றும் ஆபத்துக்களை எதிர்நோக்கல் என்பவற்றுக்காக உழைக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்ற ஆகக்குறைந்த அல்லது சராசரி இலாபம் ஆகும்.

பொருளியல் உற்பத்திச் செலவு எனக் கருதப்படுவது உற்பத்திச் செயற்பாட்டினுள் தாங்கிக் கொள்ளப்படுகின்ற மொத்த அமையச் செலவுகளுமாகும்.

சாதாரண இலாபம் என்பதும் அமையச் செலவென்றாகையால் அது உற்பத்திச் செலவினுள் உள்ளடக்கப்பட வேண்டும். (3 புள்ளி)

iii) கருதப்படுகின்றது.


இறந்த காலத்தில் செய்யப்பட்ட செலவுகள் , நிகழ்காலத்தில் மீண்டும் பெற்றுக்கொள்ளப்பட்ட அத்தகைய செலவுகள் ஆழ்ந்த செலவுகள் என அழைக்கப்படும். (1 புள்ளி)

உற்பத்திச் செயற்பாடொன்றின் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வது தொடர்பான செலவுகளைச் செய்யும் போதும் செலவு செய்யப்பட்ட பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்து தொடர்பான அமையச் செலவென்று காணப்படமாட்டாது. எனவே இத்தகைய செலவுகள் உற்பத்திச் செயற்பாட்டில் செலவினுள் உள்ளடக்கப்பட மாட்டாது. எனினும் நிலையான சொத்துக்களைப் பாவித்தல் தொடர்பான பெறுமானநத் தேய்வு நேரடிச் செலவாகவும் பொருளாதாரத் தேய்வு மறைமுகச் செலவாகவும் உற்பத்திச் செலவினுள் உள்ளடக்கப்படும். (2 புள்ளி)

iv) அ)

| தனியுரிமைந் சந்தை | சிலருரிமை சந்தை |
|---|---|
| 1. ஒரு நிரம்பலைக் காணப்படுதல் கைத்தொழிலும் நிறுவனமும் ஒன்றாக இருத்தல். | 1. ஒரு சில நிரம்பலளார்கள் காணப்படுதல் |
| 2. சிறப்பான பண்டங்கள் உற்பத்தி செய்யப்படல். | 2. வேறுபட்ட அல்லது ஒரேவகைப் பண்ட உற்பத்தி |
| 3. சுயாதீனமாக விலை தீர்மானிக்கப்படல் விலையைத் தீர்மானிப்பவர். | 3. . |
| 4. அறிமுகப்படுத்துவதற்காக மட்டும் விளம்பரம். | 4. போட்டியாக பிரபல்யமாக விளம்பரம் செய்தல். |

ஆ




நிறைபோட்டி நிறுவனமொன்று குறுங்காலத்தில் உற்பத்தியில் நிலைத்திருப்பதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பது அப்பண்டத்தின் சந்தை விலை. ஆகக்குறைந்தது சராசரி மாறும் செலவுக்கு சமனான விலையாக அல்லது அதை விட உயர்வான விலையா அல்லது அதைவிடக் குறைந்த விலையா என்பதன் அடிப்படையிலாகும். மேலுள்ள வரிப்படத்தில் A புள்ளிக்குரிய P1 விலையினால் அது காட்டப்படுகின்றது. P1ஐ விடக் குறைந்த விலை சந்தையில் காணப்படுமாயின் நிறுவனம் உற்பத்தியைக் கைவிடும். (2 புள்ளி)

நிறைபோட்டி நிறுவனமொனறின் குறுங்கால நிரம்பல் கோடாகக் கருதப்படுவது AVC கோட்டின் ஆகக்குறைந்த புள்ளிகளிலிருந்து மேல்நோக்கிச் செல்லுகின்ற எல்லைச் செலவுக் கோட்டுப்பகுதியாகும். அது வரைபடத்தின் கோட்டில் மூலம் காட்டப்படுகிறது.

(4) 1 அ) தேசிய வருமானம் = தேறிய வட்டி + உழைப்பு வருமானம் + கம்பனி இலாபம் + வாடகை வருமானம் தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம் =

= 200+100+ (60+40+50) + 300 + (50-100)
= 1600

ஆ) தேறிய உள்நாட்டு உற்பத்தி = தேறிய வட்டி + உழைப்பு வருமானம் + கம்பனி இலாம் + வாடகை வருமானம் + தேறிய நேரில் வரி

= 200+1000+ (60+40+50) + 300 +200
= 1850

இ) பெறுமானத் தேய்வு = மொத்த உள்நாட்டு உற்பத்தி – தேறிய உள்நாட்டு உற்பத்தி

1900 – 1850 = 50

மொத்தத் தேசிய உற்பத்தி = தேறிய வருமானம் + தேறிய நேரில் வரி + பெறுமானத் தேய்வு

= 1600+200+50
= 1850

ஈ) செலவிடத்தக்க குடும்ப வருமானம் = தேசிய வருமானம் + வீட்டுத்துறை மாற்றல்கள்

குடும்பங்களுக்குக் கிடைத்தவருமானம் + தனியார் வரிகள்

= 1600+300 — (40+50+250+100)

= 1460

உ) தேறிய சேமிப்பு = மொத்த முதலீடு + தேறிய ஏற்றுமதி + தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம் + வெளிநாட்டு தேறிய தனியார் மாற்றல்கள்.

= 300+200 + (-50) +70

= 520

(கணிப்பிடுவதற்கு மாற்றுமுறைகளைக் கையாளலாம்)

(10 புள்ளிகள்)

ii. அ) வெளிநாட்டுத் தேறிய காரணி வருமானம் மறைப்பெறுமதியைப் பெறுவதன் காரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியைவிட மொத்தத் தேசிய உற்பத்தி குறைந்த பெறுமதியைப் பெறும்.

ஆ) இருப்பு மாற்றம் மறைப் பெறுமதியைப் பெறுவதன் காரணமாக மொத்த மூலதன ஆக்கத்தை விட மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் உயர்ந்த பெறுமதியைப் பெறும்

இ) வர்த்தக மாற்று விகிதத்தால் ஏற்படும் விளைவுகள் சாதகமாக அமையும் போது மெய்த் தேசிய உற்பத்தியை விட மெய்த் தேசிய வருமானம் உயர்ந்த பெறுமதியைப் பெறும்.

ஈ) அடிப்படை ஆண்டுடன் ஒப்பிடும்போது குறிப்பிட்ட வருடத்தின் விலைமட்டம் உயர்வடைவதன் காரணமாக நடைமுறை விலையில் மொத்தத் தேசிய உற்பத்தியைவிட நிலையான விலைகளிலான மொத்தத் தேசிய உற்பத்தி குறைவடையும்

உ) தேறிய ஏற்றுமதிகள் மறைப்பெறுமதியைப் பெறுவதன் காரணமாக மொத்த உள்நாட்டுச் செலவைவிட மொத்த உள்நாட்டு உற்பத்தி குறைந்த பெறுமதியைப் பெறும் (5 புள்ளி)

iii. அ) முறையான புள்ளி விபரங்களுக்கு உட்படுத்தப்படாத வேண்டுமென்றே மறைத்து வைக்கப்படுகின்ற பொருளாதார செயற்பாடுகள் கவனத்திற் கொள்ளப்படாத பொருளாதார நடவடிக்கைகள் எனப்படும். இவை சிலவேளை சட்டவிரோதமானதாகவும் அமையலாம்.

நடைபாதை வியாபாரம் வீட்டுத தொழில்கள், சேனைப் பயிர்ச் செய்கை, போதைப் பொருள் உற்பத்தி விபச்சாரத் தொழில் (3 புள்ளி)

ஆ) இத்தகைய பொருளாதார செயற்பாடுகள் காரணமாக தேசிய கணக்குகள் குறைத்து மதிப்பிடப்படுகின்றன. தேசிய கணக்குகள் பற்றிய நம்பிக்கை இதனால் குறைவடைகிறது.

(5) i. அ) $Y = C + I$

$Y = 150 + 0.75Y + 225$


$Y = 375 + 0.75Y$

$Y – 0,75Y = 375$

$Y = 375/0.75$

$y = 1500$ (2 புள்ளி)

ஆ)




(2 புள்ளி)

(II) Y = E

(அ) Y = C + I+ G

Y = 150 + 0.75Yd +225+40

Y = 150 + 0.75 (y +40– 60) + 225 + 40

Y = 415 + 0.75y – 15

Y- 0.75Y = 400

$$Y = \frac{400}{0.25}$$

(2 புள்ளி)

Y = 1600

(ஆ) W = J

S + ( T- R ) = I + G

245 + (60 -40) = 225 + 40

265 = 265 (01 marks)

S= - 150 + 0.25 Yd

S= - 150 +0.25 (Y+40-60)

S= - 150 + 0.25(Y-20)

S= - 155 +0.25 Y

S= - 155 + 0.25(1600)

S= 245 (1 புள்ளி)

(III) $K = \frac{1}{(1 - MPC)} = \frac{1}{(1 - 0.75)} = \frac{1}{0.25} = 4$

- $\Delta Y = K \times \Delta I$


  $600 = 4 \times \Delta I$

  $\frac{600}{4} = \Delta I$

  $150 = \Delta I$

150 – I முதலீடு 150 ஆல் அதிகரிக்கப்படல் வேண்டும் (4 புள்ளி)

(IV) (அ)




(2 புள்ளி)

நிறைதொழில்மட்ட சமநிலை உற்பத்தி மட்டத்தின் கீழ் மேலும் 2 வகை மொத்தக் கேள்வி உயர்வடையுமாயின் விலைமட்டத்தில் அதிகரிப்பொன்று ஏற்படும். (1 புள்ளி)

ஆ) வீட்டுத்துறை நுகர்வுக்கான கேள்வி
ஆரச நுகர்வுக்கான கேள்வி
முதலீட்டுப் பண்டங்களுக்கான கேள்வி
தேறிய ஏற்றுமதி
C + I + G + Cx – m (2 புள்ளி)

(V) செலவிடத்தக்க வருமானம்
வீட்டுத் துறையிலுள்ள சொத்துக்கள்/செல்வநிலை
விலை மட்டம்
வட்டி விகிதம் (3 புள்ளி)

(06) i. அடிப்படைப் பணம் என்பது ஒருநாட்டின் பணநிரம்பலுக்கு அடிப்படையாக உள்ள மத்திய வங்கியின் பொறுப்புக்கள் சிலவாகும். அது மத்திய வங்கியின் ஐந்தொகையில் பொறுப்புக்களாக பின்வருமாறு காட்டப்பட முடியும்.

1. சட்டமுறைப் பணம் - பொது மக்களிடமுள்ள சட்டமுறைப் பணம்

வர்த்தக வங்கிகளிடமுள்ள சட்டமுறைப் பணம்

2 மத்திய வங்கியிடமுள்ள வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள்
3 மத்திய வங்கியிடமுள்ள அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்களின் வைப்புக்கள்

அடிப்படைப் பணத்துக்கும் பணநிரம்பலுக்கும் இடையிலான தொடர்பு, ஒரு நாட்டின் அடிப்படைத் பணத்தொகையை பணப்பெருக்கியினால் பெருக்கும் போது பண நிரம்பலைப் பெறமுடியும்.

பண நிரம்பல் = அடிப்படைப் பணம் X பணப்பெருக்கி (4 புள்ளி)

ii. தேவையான ஒதுக்கு 500 x 20/100 = 100
காணப்படும் ஒதுக்கு ( உண்மை ஒதுக்கு) = 70
குறை ஒதுக்கு = 30
வைப்புப் பெருக்கி 1/20 / 100 = 5

எனவே குறை ஒதுக்கை பெருக்கியினால் பெருக்கி கிடைக்கின்ற பெறுமதியின் அளவினால் வைப்பு ஒடுக்கம் செய்ய வேண்டும். அப்போது இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| வைப்பு | 350 | பண ஒதுக்கு | 70 |
| | | திறைசேரி உண்டியல் | 130 |
| | | கடன்களும் முற்பணமும் | 150 |
| | 350 | | 350 |

(2 புள்ளி)

பன்முக வைப்புச் சுருக்கம் என்பது வங்கி அமைப்பினுள் குறை ஒதுக்கம் காணப்படும்போது அக்குறை ஒதுக்கியினைப் பெருக்கியினால் பெருக்கி கிடைக்கின்ற பெறுமதியில் கடன்களையும் வைப்புகளையும் மீண்டும் வீழ்ச்சியடையச் செய்யும் செயல்முறை ஆகும். அதாவது குறை ஒதுக்கியைப் போல வைப்புப் பெருக்கியின் அளவினால் பணநிரம்பலை வீழ்ச்சியடையச் செய்யும் செயற்பாடாகும்.

(2 புள்ளி)

iii. அழைப்புக்கடன் சந்தையில் குறை திறவத்தன்மை காணப்படும் போது வட்டி விகிதம் விரைவாக மேல்நோக்கிச் செல்லும் நிலை ஏற்படுவதுடன் மிகை திரவத்தன்மை காணப்படும்போது கீழ்நோக்கிச் செல்லும் நிலை ஏற்படும். இதன்மூலம் அழைப்புக் கடன் சந்தையில் வட்டி வீதத்தில் தளம்பல் நிலை ஏற்படும். (1 புள்ளி)

வட்டி விகித உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்காக அழைப்புக் கடன் சந்தையில் வட்டி வீதம் மாற்றமடையும் இடைவெளியைக் கட்டுப்படுத்துவதற்காக மத்திய வங்கி மீள் விற்பனை மற்றும் மீள் கொள்வனவு வீதத்தையும் நெறிப்படுத்தும். (1 புள்ளி)

மீள் கொள்வனவு விகிதமானது மத்திய வங்கியின் நாளாந்தக் கடன்பெறும் விகிதமாக இருப்பதுடன் அது அழைப்புக்கடன் சந்தையின் வட்டியின் கீழ் எல்லை ஆகும். மீள் விற்பனை விகிதம் நாளாந்தக் கடன் கொடுக்கும் விகிதமாக இருப்பதுடன் அது அழைப்புக்கடன் சந்தையில் வட்டியின் மேலெல்லை ஆகும். இவ்வட்டி விகித இடைவெளி அழைப்புக்கடன் சந்தையில் வட்டிவிகித செல்வழி எனக் கருதப்படுகிறது. இவ்விடைவெளியை நெறிப்படுத்தல் மூலம் வங்கிகளுக்கிடையிலான அழைப்புக் கடன் சந்தையில் சராசரி வட்டி விகிதத்தை நிலையான மட்டத்தை நிலையான பேணிக்கொள்ள முடியுமாக்கும். (2புள்ளி)

iv. அ) - விலை மற்றும் பொருளாதார உறுதி -
- நிதிமுறைமையின் உறுதி (2 புள்ளி)

ஆ) - பணக்கொள்கையை உறுதிப்படுத்தல்

- வெளிநாட்டு நாணயமாற்றுக் கொள்கையை நெறிப்படுத்தல்
- உத்தியோகபூர்வ வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவம்
- சட்டமுறைப் பண வெளியீடு
- நிதி நிறுவனங்களை ஆரம்பிப்பதற்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல், கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை
- மத்திய வங்கியின் கணக்குகளைப் பேணி வருகின்ற நிதி நிறுவனங்களுக்கு தீர்ப்பனவு வசதிகளை ஏற்படுத்துதல்
- அரசின் வங்கியாளர் நிதி ஆலோசகராக மற்றும் நிதிப் பிரதிநிதியாக நடவடிக்கைகளில் ஈடுபடல் (3 புள்ளி)

v. நாட்டின் மொத்தக் கேள்வியை விரிவுபடுத்துவதற்காகப் பணக் கொள்கையைப் பயன்படுத்தும் விதம்

1. வட்டி விகிதத்தைக் குறைத்தல்
2. ஒதுக்கு விகிதத்தைக் குறைத்தல்
3. பகிரங்க சந்தை நடவடிக்கையின் கீழ் மத்திய வங்கி மூலம் திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்தல்

(3 புள்ளி)

(7) i. அ) சந்தைத் தோல்வி என்பதனால் கருதப்படுவது சமூகத்தின் நலனைக் கருத்திற்கொண்டு பற்றாக்குறையான வளங்களைப் பங்கீடு செய்யும்போது விலைப்பொறிமுறை தோல்வியடைவதாகும். அதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாவன

1. வளப்பங்கீடு செயற்திறனற்றுப் போதல்

- பொதுப் பண்டங்களை வழங்காமை
- வெளிவாரி விளைவுகள்
- பூரணமற்ற தகவல்கள்
- பூரணமற்ற போட்டி
- பொதுச் சொத்துக்களினதும் வளங்களினதும் மிகைப் பாவனை
- காரணி அசைவற்ற தன்மை

2.வளப்பங்கீடு நியாயமற்றதாக அமைதல்

3. பொருளாதார உறுதியற்ற நிலை (1 புள்ளி)

அரசாங்கத்தின் தோல்வி சந்தைப் பொறிமுறை தோல்வியடையும் பட்சத்தில் அதனைச் சரிப்படுத்துவற்காக அரசாங்கம் பொருளாதாரத்தில் தலையிடுகின்ற போதிலும் அதனைக் காரணமாகக் கொண்டு சந்தை முறையில் காணப்பட்ட தோல்வி நிலைமை மேலும் ஆழமாக விருத்தியடைந்து செல்லல் அல்லது முன்னர் காணப்படாத வேறு பிரச்சினைகள் ஏற்படும் நிலை உருவாகுவதாகும். அரசாங்கத்தின் தோல்விக்கு கீழ்வருவன செல்வாக்குச் செலுத்தும் காரணங்களாகும்.

- அரச நடவடிக்கைகளில் காணப்படுகின்ற தேக்க நிலமைகள்
- அரசியல் சுய ஆதிக்கம்
- அரசாங்கக் கொள்கைகளின் தூரநோக்கற்ற தன்மை
- பூரணமற்ற தகவல்களின் அடிப்படையில் கொள்கைத் தீர்மானங்களுக்கு வருதல்
- நடுநிலைத் தன்மைக்குப் பொருத்தமற்ற தலையீடுகள்
- நிர்வாகச் செலவுகள் அதிகரித்தல்

ஆ) a. மணிக்கூட்டுக் கோபுரம் - பொதுப்பண்டமாகும்

- நுகர்வை வரையறுக்க முடியாது
- நுகர்வில் போட்டித் தன்மையில்லை

b. ஓசோன் படை – உலகப் பொதுப் பண்டமாகும்.

- உலக மக்களுக்கு நன்மைகள் உரித்தாகுதல்
- நுகர்வை வரையறுக்க முடியாது
- நுகர்வில் போட்டித் தன்மையில்லை

C. கல்வி – சமூகநலப் பண்டமாகும்

- தனியார் நன்மைகளுக்கு மேலதிகமாக வெளிவாரி நன்மைகள் காண்ப்படல்

d. நீச்சல் தடாகம் - களப் பொதுப்பண்டமாகும்

- உச்சமட்ட இயலளவை அடையும் வரை நுகர்வில் போட்டித்தன்மை இல்லை
- நுகர்வைக் கட்டுப்படுத்த முடியும்

e. சமுத்திரத்திலுள்ள மீன்வளம் - பொதுப்பண்டம்

- நுகர்வைக் கட்டுப்படுத்த முடியாது
- நுகர்வில் போட்டித் தன்மை உண்டு

(5 புள்ளி)

ii. மீள்சுழற்சி அரச பணக்கொள்கை என்பது அரசாங்க செலவு மற்றும் வரிகளை தன்னியல்பாக மாற்றமடைவதற்கு இடமளிக்காது பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக கொள்கை ஆக்குவோருக்குத் தேவையான விதத்தில் அரச செலவுகளையும் வரிகளையும் மாற்றமடையச் செய்யும் செயற்பாடாகும் அல்லது வர்த்தக ஓட்டகத்தில் வீழ்ச்சி நிலையைச் சமப்படுத்துவதற்காக அரச நிதியினை தற்துணிவின்படி இயக்கும் செயற்பாடாகும். (1 புள்ளி)

மீள்சுழற்சி அரச நிதிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு எதிராக முன்வைக்கப்படும் வாதங்கள்

1. இனங்கண்டு கொள்வதில் உள்ள தாமதம்
2. நிர்வாகத் தாமதம்
3. அரசியல் சுயாதீனம்
4. தள்ளல் விளைவுகள் (2 புள்ளி)

iii. அ) வரி முறைமையில் நியாயத்துவம் என்பது செலுத்தும் ஆற்றலை அடிப்படையாகக் கொண்டு அல்லது பிரதிபலனை அனுபவிக்கும் அளவின் அடிப்படையில் சமத்துவமொன்று ஏற்படும் வகையில் வரி விதிக்கப்பட வேண்டும் என்பதாகும். நியாயத்துவம் என்பதன் கீழ் பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

1. கிடையான சமத்துவம் - சமமான பொருளாதார ஆற்றல்கொண்டவர்கள் மீது சமமான வரிச்சுமை ஒன்றைக் கொடுத்தல்
2. குத்தான சமத்துவம் - சமமற்ற பொருளாதார ஆற்றல்கொண்டவர்கள் மீது சமமற்ற வரிச்சுமையை ஏற்படுத்தல்

ஆ) விருத்திமுறை வரி – வரி அடிப்படை மற்றும் வரி விகிதம் இடையே நேரான தொடர்பு காணப்படும் வரிவகை ஆகும்.

- வருமான வரி
- சொத்துவரி

குறைந்து செல்லும் வரி - வரி அடிப்படை மற்றும் வரி விகிதம் என்பவற்றுக்கிடையே எதிரான தொடர்பு காணப்படும் வரி வகை ஆகும்.

- தெரிவுசெய்யப்பட்ட உற்பத்தி வரி

விகித சம வரி - வரி அடிப்படை எதுவாக இருப்பினும் அறவிடப்படும் வரி விகிதம் நிலையாகக் காணப்படுகின்ற வரி வகையாகும்.


- சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரி (VAT) (3 புள்ளி)

இ) மிகை வரிச் சுமை என்பது பண்டங்கள் மீது வரி விதிப்பதனால் இழக்கப்படும் சமூக நலனில் அளவாகும். இந்நிலை ஏற்படுவதற்கு இரண்டு நிலைமைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

1. வரியை நகர்த்த முடியுமாக இருத்தல்
2. வரியை சீராக்கம் செய்ய முடியுமாக இருத்தல் (1 புள்ளி)


பண்டங்கள் மீது வரி விதிப்பதனால் ஏற்படும் மிகை வரிச்சுமை அப்பண்டத்திற்குக் காணப்படும் கேள்வி மற்றும் நிரம்பல் நெகிழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

பூரண நெகிழ்வற்ற கேள்வி காணப்படும் பண்டமொன்றுக்கு வரி விதிக்கும்போது மிகை வரிச்சுமை ஏற்பட மாட்டாது.




- மிகை வரிச்சுமை ஏற்பட மாட்டாது.

பூரண நெகிழ்வுள்ள கேள்வி கொண்ட பண்டமொன்றுக்கு வரி விதிக்கப்படும் போது மிகை வரிச்சுமை ஒன்று ஏற்படும்




- A,B,C அளவினால் மிகைவரிச் சுமை ஒன்று ஏற்படும் (2 புள்ளி)

iv. உள்நாட்டு நிதி மூலங்களினால் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை நிதியீட்டம் செய்தல். – மொ.உ.உற்பத்தியின் வீதமாக 3..5%

வெளிநாட்டு நிதி மூலங்களினால் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை நிதியீட்டம் செய்தல். – மொ.உ.உற்பத்தியின் வீதமாக 3.4% (2011 ஆம் ஆண்டில்) (1 'புள்ளி)

உள்நாட்டு மூலங்களால் நிதியீட்டம் செய்வதன் விளைவுகள்

1. பணநிரம்பலில் விரிவாக்கம் ஏற்படவதால் பணவீக்கம் ஏற்படும்
2. crowing -out விளைவுகள் ஏற்படல்
3. உள்நாட்டுச் சந்தை வட்டிவீதம் உயர்வடைதல்

வெளிநாட்டு மூலங்களால் நிதியீட்டம் செய்வதன் விளைவுகள்

1. வெளிநாட்டுக்கடன் சேவைப்படுத்தல் அதிகரித்தல்
2. வெளிநாட்டுச் சொத்துக்கள் உயர்வடைவதால் பணத்தின் வெளிநாட்டுப் பெறுமதி தற்காலிகமாக உயர்வடைதல்
3. நீண்டகால ரீதியில் சென்மதி நிலுவைப் பிரச்சினை உருவாகுதல் (1 புள்ளி)

(8) (I) அ) உள்நாட்டுச் சந்தை வட்டிவீதம் உயர்வடைதல்


| | சீனா | தாய்வான் |
|---|---|---|
| வானொலிப் பெட்டி உற்பத்திக்கான அமையச் செலவு | 10/4 = 2.5 | 5/1 = 5 |
| கணினி உற்பத்திக்கான அமையச் செலவு | 4/10 = 0.4 | 1/5 = 0.2 |


வானொலிப் பெட்டி உற்பத்தியில் ஒப்பீட்டு நலன் காணப்படுவது சீனாவுக்காகும். காரணம் வானொலிப் பெட்டி உற்பத்திக்கான அமையச் செலவு ஒப்பீட்டளவில் குறைவாகும்.

கணினி உற்பத்தியில் ஒப்பிட்டு நன்மை காணப்படுவது தாய்வானுக்காகும். காரணம் தாய்வானில் கணினி உற்பத்திக்கான அமையச் செலவு ஒப்பீட்டு ரீதியில் குறைவாகும்.

(அமையச் செலவினைக் கணித்து ஒப்பீட்டு நலன் காணப்படும் நாட்டை பெயரிட்டு இருப்பின் 01 புள்ளி வீதம் இரண்டிற்கும் 2 புள்ளிகள் வழங்குக.)

ஆ)




சீனா வானொலிப் பெட்டி உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சியை ஏற்படுத்திக் கொள்கிறது. பூரண சிறப்புத் தேர்ச்சி அடிப்படையில் சீனா A என்ற உற்பத்திச் சேர்க்கையை உற்பத்தி செய்யும்.

தாய்வான் கனணி உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்கிறது. பூரண சிறப்புத் தேர்ச்சி அடிப்படையில் தாய்வான் B என்ற உற்பத்திச் சேர்க்கையை உற்பத்தி செய்யும்.

(உற்பத்தி சாத்திய வளையியைச் சரியாக வரைந்து உற்பத்திச் சேர்க்கையை சரியாகக் காட்டியிருப்பின் 01 புள்ளி வீதம் 02 புள்ளிகள் வழங்குக.)

இ) வானொலிப் பெட்டி உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சியைப் பெற்ற சீனா 100 வானொலிப் பெட்டிகளை ஏற்றுமதி செய்து 400 கனணிகளை இறக்குமதி செய்யும்போது நுகர்வுச் சேர்க்கை $A^1$ வரை நகர்கின்றது. அதன்படி சீனாவின் நுகர்வுச் சாத்திய எல்லை உற்பத்தி சாத்திய எல்லையிலிருந்து வலப்பக்கமாக நகர்கின்றது.

கனணி உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சியைப் பெற்ற தாய்வான் 400 கனணிகளை ஏற்றுமதி செய்து 100 வானொலிப் பெட்டிகளை இறக்குமதி செய்கிறது. அப்போது நுகர்வுச் சேர்க்கை $B^1$ வரை நகர்கின்றது. இதன்படி தாய்வானின் நுகர்வுச் சாத்திய எல்லை உற்பத்தி சாத்திய எல்லையிலிருந்து வலப்பக்கமாக நகர்கின்றது.

(நுகர்வுச் சேர்க்கையை சரியாகக் காட்டி நுகர்வுச் சாத்திய எல்லையையும் வரைந்திருப்பின் 01 புள்ளி வீதம் 02 புள்ளிகள் வழங்குக.)

ஈ) சீனா ஒரு வானொலிப் பெட்டியை ஏற்றுமதி செய்து தாய்வானிலிருந்து இறக்குமதி செய்யும கணினிகளின் தொகை 2.5 ற்கும் 5 ற்கும் இடையில் அமைய வேண்டும்.

தாய்வான் கனணி ஒன்றை ஏற்றுமதி செய்து சீனாவிலிருந்து இறக்குமதி செய்யும் வானொலிப் பெட்டிகளின் தொகை 0.2 ற்கும் 0.4 ற்கும் இடையில் அமைய வேண்டும். (2 புள்ளி)

ii. அ) வருமானக் கணக்கில் - வருமானக் கொடுப்பனவு

ஆ) நிதியியல் கணக்கில் - நீண்டகால அரசாங்கக் கடன்களை மீளச் செலுத்துதல்

இ) நடைமுறை மாற்றல் கணக்கில் தனியார் மாற்றல் கொடுப்பனவு

ஈ) சேவைக் கணக்கில் வியாபாரச் சேவைக் கொடுப்பனவு

(ஒன்றுக்கு 01 புள்ளி வீதம் 04 புள்ளிகள் வழங்குக.)

iii. இறக்குமதித் தீர்வைவரி ஒன்றை விதிப்பதன் விளைவாக உள்நாட்டில் உற்பத்திச் செய்யப்படுகின்ற போட்டிப் பண்டமொன்றுக்கு இறக்குமதி செய்யப்படும் பண்டத்தின் விலை அதிகரிப்பின் சதவீதத்தின் மூலம் கிடைக்கின்ற பாதுகாப்பு பெயரளவுப் பாதுகாப்பு விகிதம் எனப்படும். பெயரளவுப் பாதுகாப்பு விகிதத்தை இறக்குமதித் தீர்வைக்குப் பின்னர் உள்நாட்டுப் பண்டத்தின் விலையை இறக்குமதிப் பண்ட விலையின் சதவீதமாகக் கூறுவதன் மூலம் காட்ட முடியும்.

இறக்குமதித் தீர்வை வரிக்குப் பின்னர் உள்நாட்டுப் போட்டிப் பண்டமொன்றுக்கு சேர்க்கப்பட்ட பெறுமதிக்கும் தீர்வை வரி விதிக்கப்பட முன்னர் (கட்டில்லாப் பொருளாதாரத்தின் கீழ்) உள்நாட்டு உற்பத்தியில் சேர்க்கப்பட்ட பெறுமதிக்கும் இடையிலான வேறுபாட்டை தீர்வைவரி விதிக்கப்பட முந்திய உள்நாட்டு உற்பத்தியின் சேர்க்கப்பட்ட பெறுமதியின் சதவீதமாகக் காட்டுவது பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு விகிதமாகும்.

$$\text{பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு விகிதம்} = \frac{\text{தீர்வைவரிக்குப் பின்னரான உள்நாட்டு உற்பத்தியில் சேர்க்கப்பட்ட பெறுமதி} - \text{கட்டில்லா வர்த்தகத்தின் கீழ் சேர்க்கப்பட்ட பெறுமதி}}{\text{கட்டில்லா வர்த்தகத்தின் கீழ் சேர்க்கப்பட்ட பெறுமதி}} \times 100$$

(ஒரு விடயத்திற்கு 1 புள்ளி வீதம் ஆகக்கூடியத 2 புள்ளிகள்)

iv. நிலையான வெளிநாட்டு நாணயமாற்று விகிதத்தின் நன்மைகள்

- அடிக்கடி நாணயமாற்று விகிதம் தளம்பல் அடையும் அபாயம் நீக்கப்படுவதால் சர்வதேச வர்த்தகம் ஊக்குவிக்கப்படும்
- ஏற்றுமதிகளின் போட்டித் தன்மையை பாதுகாத்துக் கொள்வதற்காக உற்பத்திச் செலவை ஒப்பீட்டு ரீதியில் குறைந்த மட்டத்தில் பேணிக் கொள்வதற்கு இதனால் வற்புறுத்தப்படுவதனால் உள்நாட்டுப் பொருளாதார முகாமைத்துவம் தொடர்பாக இருக்கமான ஒழுங்கொன்று ஏற்படும்.
- சர்வதேச மூலதன முதலீடுகள் மற்றும் கடன் நிதிகள் என்பவற்றைப் பரிமாறிக் கொள்வதற்குச் சாதகமான நிலை ஏற்படும்.
- நாணயமாற்று விகிதத்தின் எதிர்பார்க்கப்பட்ட மாற்றங்களை அடிப்படையாகக் கொண்ட உத்தேச நடவடிக்கைகள் நடைபெற மாட்டாது

**.நிலையான வெளிநாட்டு நாணயமாற்று விகிதத்தின் தீமைகள்**

- வெளிவாரி சமநிலைக்காக உள்நாட்டு சமநிலையைத தியாகம் செய்ய வேண்டி ஏற்படும்.
- நிலையான நாணயமாற்று விகிதத்தினுள் மிகை அல்லது குறைக் கணிப்பீடுகள் ஏற்படுமாயின் நிரந்தரமான சென்மதி நிலுவை சமமின்மைக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படல்.
- நிலையான நாணயமாற்று விகிதத்தினைப் பேணுவதற்கு நாணய அதிகாரிகளுக்கு வெளிநாட்டு செலவாணியில் பெருமளவான ஒதுக்கொன்றை பேணவேண்டி ஏற்படல்
- போதியளவான வெளிநாட்டு செலாவணி ஒதுக்கொன்று நாணய அதிகாரிகளிடம் இல்லாத சந்தர்ப்பத்தில் சென்மதி நிலுவைப் பற்றாக்குறை காணப்படுமாயின் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டி ஏற்படல் மற்றும் அதனால் சமூக நலனுக்குப் பாதிப்பு ஏற்படல்

**நெகிழும் நாணயமாற்று விகிதத்தின் நன்மைகள்**

- வெளிநாட்டுச் செலாவணிக்கான கேள்வி மற்றும் நிரம்பலை சமப்படுத்துகின்ற சமனிலை நாணய மாற்று விகிதமாகையால் உலக வளங்கள் மாற்றுப் பயன்பாடுகளிடையே மிகவும் செயற்றிறன் வாய்ந்த வகையில் பங்கீடு செய்யப்படும்.
- உண்மையான நாணயமாற்று விகிதமாகையால் உலக வளங்கள் மாற்றுப் பயன்பாடுகளிடையே மிகவும் செயற்றிரன் வாய்ந்த வகையில் பங்கீடு செய்யப்படும்.
- வெளிநாட்டு சமநிலையைப் பேணுவதற்காக உள்நாட்டு சமநிலையை அர்ப்பணிக்க வேண்டி ஏற்படாதாகையால் நெகிழ்வுள்ள நாணயமாற்று விகிதம் காணப்படும்போது பொருளாதார முகாமைத்துவம் மிகவும் இலகுவானதாக அமையும்
- பணக்கொள்கை வெளிநாட்டுக் காரணிகளின் செல்வாக்கிலிருந்து முழுமையாக விடுவிக்கப்படுவதனால் உள்நாட்டுப் பொருளாதாரததை வலுப்படுத்துவதற்கும் அதனைச் சுதந்திரமாகப் பயன்படுத்தவும் முடியுமாக இருத்தல்
- நாணய மாற்று வீதத்தை பேணுவதற்காக பெருமளவு வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கினை பேணவேண்டிய தேவை ஏற்பட மாட்டாது.

**நெகிழும் நாணயமாற்று விகிதத்தின் தீமைகள்**

- அடிக்கடி தளம்பலடைவதால் சர்வதேச வர்த்தக ஊக்குவிப்புக்கு தடைகள் ஏற்படல்
- உத்தேச செயற்பாடுகள் ஊக்குவிக்கப் படுவதனால் நாணயமாற்று வீதம் கடுமையான தளம்பல்களுக்குட்படும்
- பேரினப் பொருளாதார ஒதுக்கமொன்றைப் பேணி செல்வதற்கான ஊக்குவிப்புகள் ஏற்பட மாட்டாது
- முதலீட்டாளர்களுக்குக் கடன் முற்பண வாடிக்கையாளர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

(ஒவ்வொரு நாணய மாற்று வீதத்தினதும் நன்மைகள், தீமைகள் இரண்டு வீதம் காட்டப்படுவதற்கு ஆகக்கூடியது 4 புள்ளிகள்)

- தென்ஆசிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் SAFTA
- தென்ஆசிய பிராந்திய நாடுகளின் கூட்டமைப்பு SAARC
- பிம்ஸடெக் BIMSTEC
- ஆசிய பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பு
- இந்துசமுத்திர வட்டப்பிராந்திய ஒத்துழைப்புக்கான அமைப்பு IORARC

(2 புள்ளி)

(9) காலத்துடன் இணைந்த வகையில் பொருளாதாரத்தின் உத்தம உற்பத்தி அல்லது உற்பத்தி இயலளவு விரிவடைவது பொருளாதார வளர்ச்சியாகும் . அது கேள்வி நிரம்பல் மற்றும் செயற்றிறன் ஆகிய காரணிகளின் இடைச்செயற்பாட்டின் மூலம் ஏற்படுகின்ற தொகை ரீதியான செயற்பாடாகும்.

**வளர்ச்சிக்குத் தேவையான செயற்பாடுகள்**

- சேமிப்பு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு
- வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல்
- கீழ்க்கட்டமைப்புகளை முன்னேற்றுதல்
- மனித வள முதலீட்டு அபிவிருத்திக்கான முதலீடுகள்
- சொத்துரிமையைப் பாதுகாத்தல்
- அரசியல் உறுதிப்பாடு
- கட்டுப்பாடற்ற வர்த்தகம்
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான செலவுகளை அதிகரித்தல்
- வரிகளைக் குறைத்தலும் கண்காணித்தலும்

ii. பொருளாதாரத்தின் சகல துறைகளிலும் பரந்து செல்கின்ற நிலைத்து நிற்கக்கூடிய வளர்ச்சியொன்றை அடைந்து கொள்வது அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி என்பதால் கருதப்படுகிறது.
இதன்மூலம் பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகளிலிருந்து விலகி நிற்கின்ற சமூகப்பிரிவினருக்கு பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளுடன் இணைந்து கொள்வதற்கான வாய்ப்பு கிட்டுகிறது. அதன்படி சமூகத்தின் சகல பிரஜைகளுக்கும் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்பதற்கும் அதன்மூலம் பிரதிபலனைப் பெறுவதற்கும் வழியேற்படுகிறது.

அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி என்பதனால் வருமானம் மீளப்பரம்பல் செய்யப்படுகின்றது என்பது மட்டும் பொருள் கொள்ளப்படவில்லை. ஆதனால் விளக்கப்படுவது தனிநபர்களுக்கு பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பங்களிப்பதற்குரிய ஆற்றலை முன்னேற்றுதல் மற்றும் வேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்களை உருவாக்குவதற்கான பொருத்தமான வர்த்தகச் சூழலைக் கட்டியெழுப்புவதாகும் என்பதோடு அது வருமான மீள்பங்கீடு என்ற எண்ணக்கருவை விட வேறுபட்டதாகும்.

வறியர்வகளுக்குச் சார்பான பொருளாதார வளர்ச்சி என்பது வறியவர்களின் நடுவருமானம் வறியவர்களல்லாதோரது நடுவருமானத்தைவிட கூடிய வேகத்தில் அதிகரிக்கும் விதத்திலான வளர்சியாகும். இதனால் வருமான ஏற்றத்தாழ்வு குறைகிறது. வளர்ச்சியினால் வறியவர்களுக்கான பிரதிபலன்கள் அதிகரிக்குமாயின் அது வறியவர்களுக்குச் சார்பான பொருளாதார வளர்ச்சியாகும்.

(4 புள்ளி)

iii. மானிட அபிவிருத்தி என்பது மானிட ஆற்றல்களும் நடவடிக்கைகளும் விரிவடையும் வகையில் ஒரு நாட்டின் மக்களது தெரிவு செய்யும் பரப்பு விரிவடைந்து செல்கின்ற ஒரு நடவடிக்கையாகும். மானிட அபிவிருத்தி மூன்று பிரதான பரிமாணங்களின் கீழ் அவதானிக்கப்படுகிறது.

- நீண்ட சௌக்கியமான வாழ்க்கை ஒன்றைக் கழித்தல்
- அறிவு
- சிறந்த வாழ்க்கைத் தரம்

நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி என்பது எதிர்காலப் பரம்பரையினரின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தடை ஏற்படாத வகையில் நிகழ்காலப் பரம்பரையினரால் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் செயற்பாடாகும்.

- ✓ பொருளாதார வளர்ச்சி
- ✓ சமூக அபிவிருத்தி
- ✓ சூழல் பாதுகாப்பு (4 புள்ளி)

iv. அ)

| வருடம் | சிறுவர் தங்கியிருத்தல் விகிதம் | முதியோர் தங்கியிருத்தல் விகிதம் | மொத்தத் தங்கியிருப்போர் விகிதம் |
|---|---|---|---|
| 2001 | 40.7 | 14.3 | 55.0 |
| 2006 | 37.4 | 16.2 | 53.6 |
| 2011 | 35.3 | 19.3 | 54.6 |

(2 புள்ளி)

ஆ)

- ○ உழைப்பின் நிரம்பல் குறைவடைதல்
- ○ சேமிப்பும் முதலீடும் குறைவடைதல்
- ○ அரசாங்கம் நிதி நெருக்கடிக்குள்ளாதல்
- ○ அரச கடனின் அதிகரிப்பு
- ○ வருமானம் வீழ்ச்சியடைதல்
- ○ சுகாதார சேவைக்காக அதிக செலவைத் தாங்கவேண்டி ஏற்படல்

இந்த சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக பின்வரும் முன்மொழிவுகளை முன்வைக் முடியும்

- வேலை செய்யும் வருடங்களை அதிகரித்தல்
- ஓய்வூதிய மறுசீரமைப்பைச் செயற்படுத்துதல்
- சுகாதாரத் துறையை விருத்தி செய்தல்
- சமூகப் பாதுகாப்பு நலன்களை வழங்குதல்
- உழைப்புச் சந்தை மறுசீரமைப்பு
- ஏனைய வர்த்தகக் கொள்கைகள் (4 புள்ளி)

v. பல்பரிமான வறுமைச் சுட்டெண் கணிப்பிடப்படுவது மானிட வறுமைச் சுட்டெண் மற்றும் இயலாமைச் சுட்டெண்ணின் சராசரிப் பெறுமதி ஆகிய இரண்டையும் ஒன்றால் ஒன்றைப் பெருக்குவதன் மூலமாகும். அதாவது பல்பரிமாண வறுமைச் சுட்டெண் மானிட வறுமைச் சுட்டெண் X இயலாமைச் சுட்டெண்

(2 புள்ளி)

(10) i. ஆ) முதல் 10 வருடத்தினுள் 8% மான சராசரி வருடாந்த பொருளாதார வளர்ச்சியை அடைந்து கொள்ளல் மற்றும் அதன் பின்னர் 9% - 10% வரையிலான பொருளாதார வளர்ச்சியை அடைந்து கொள்ளல்

அடுத்த 10 ஆண்டுகளிலும் முதலீட்டு மட்டத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 32% -- 38% வரையாகப் பேணுதல் (1 விடயத்திற்கு 1 வீதம் 2புள்ளி)

ஆ) 2007 முதல் 2011 வரையிலான ஆரம்ப 5 வருடங்களிலும் இலங்கையின் சராசரிப் பொருளாதார வளர்ச்சி வேகம் 6.5% ஆக இருந்ததுடன் இறுதி இரண்டு வருடங்களிலும் 8% என்ற இலக்கை அடைந்துள்ளது.

2007 - 2011 வரையான காலத்தினுள் முதலீட்டு விகிதம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 24.4% – 24.9% ற்கும் இடையில் அமைந்தது. எதிர்பார்த்த மட்டத்தை அடையாவிடினும் திருப்திகரமான முன்னேற்றமாகும். (1 புள்ளி)

இ)

- உக்கிரமடைந்துவரும் சென்மதி நிலுவைப் பிரச்சினை
- ரூபா தேய்வடைதல்
- கடன் சுமை வேகமாக அதிகரித்தல்
- வரவு செலவுத்திட்ட அடிப்படையிலான நெருக்கடி அதிகரித்தல்
- தனியார் முதலீடுகள் மந்தமடைதல்
- பணவீக்க அமுக்கங்கள் தோன்றுதல்
- வானிலைச் செல்வாக்கால் விவசாயம் மற்றும் வலுச்சக்தி பின்தள்ளப்படல்

(3 புள்ளி)

ii. அ) மூலதனப் பற்றாக்குறை என்பது முதலீட்டுக்கும் உள்நாட்டுச் சேமிப்புக்கும் இடையிலான வித்தியாசமாகும்.

- நேரடி வெளிநாட்டு முதலீடு
- வெளிநாட்டுக் கடன்களும் உதவிகளும் (2 புள்ளி)

ஆ) கடந்த ஆண்டுகளில் இலங்கையை நோக்கி வரும் வெளிநாட்டு நேரடி முதலீடு நிலையற்ற தன்மையைக் காட்டிய போதிலும் 2011 இல் அது சாதகமான போக்கைக் காட்டுகிறது. வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2010 இல் 516 அமெரிக்க டொலர்கள் 2011 இல் 1066 அமெரிக்க டொலர்கள்

(1 புள்ளி)

ஏவ்வாறாயினும் இந்தியா, வியட்நாம், சீனா போன்ற நாடுகளுக்கு கிடைக்கின்ற நேரடி முதலீட்டுத் தொகையுடன் ஒப்பிடும்போது எமது நாட்டுக்கு வரும் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றன (1 புள்ளி)

இ)

- கீழ் கட்டமைப்பு வசதிகளின் குறைபாடு
- வலுச் சக்திப் பிரச்சினை
    - அடிக்கடி மின்வெட்டு
    - 80% மின்சாரம் மின் உற்பத்தி இயந்திரங்களால் பெறப்படல்

- நிலையான சொத்துக்களின் 12% வரை செலவிடப்படுவது மின்பிரப்பாக்கி இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காக

- நிதி வசதிகளுக்காக காணப்படும் வரையறுக்கப்பட்ட வசதிகளும் அதிக செலவும்
- பேரினப் பொருளாதார உறுதியின்மை
- உழைப்பைப் பயன்படுத்தல் தொடர்பான கடுமையான பிரமாணங்கள்
- உயர்ந்த வரிச்சுமை
- நல்லாட்சி முறிவடைதல்
- உள்நாட்டுச் சந்தை சிறியதாக இருத்தல்
- தனியார் வெளிநாட்டு முதலீடு தொடர்பாக அரசாங்கக் கொள்கைகளில் காணப்படும் நிலையற்ற தன்மை (அபலோ வைத்தியசாலை, செல் கம்பனி, இலங்கை விமானசேவை தொடர்பான அனுபவங்கள்)
- உற்பத்திச் செலவு அதிகரித்தல் (3 புள்ளி)

iii. அ) மொத்த வறுமை குறைவடைந்துள்ளது.
துறை ரீதியாகவும் பிரதேச அடிப்படையிலும் வறுமையின் ஏற்றத்தாழ்வு காணப்படுகிறது

| துறை | 1990 / 1991 | 1995 / 1996 | 2002 | 2006 / 2007 | 2009 / 2010 |
|---|---|---|---|---|---|
| கிராமியத் துறை | 29.4 | 30.9 | 24.7 | 15.7 | 9.4 |
| நகர | 16.3 | 38.4 | 7.9 | 6.7 | 5.3 |
| தோட்ட | 20.5 | 14.0 | 30.0 | 32.0 | 11.4 |
| இலங்கை | 26.1 | 28.8 | 22.7 | 15.2 | 8.9 |

(2 புள்ளி)

ஆ) சமூகப் பாதுகாப்பு வலைப்பின்னல் நிகழ்ச்சித் திட்டங்கள்

- ✓ ஜனசவிய
- ✓ சமூர்த்தி

குறைந்த வருமானம் பெறுவோருக்கு மாற்றல் வழங்கல்

- ✓ உணவு முத்திரை
- ✓ மகாபொல புலமைப் பரிசில்

சமூகப் பாதுகாப்பு வலையமைப்புத் திட்டம்

- ✓ நுண்பாக நிதி
- ✓ பெண்களை வலுவூட்டல்

பிரதேச அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

- ✓ புபுதமு வெல்லஸ்ஸ
- ✓ வடக்கின் வசந்தம்
- ✓ கிழக்கின் உதயம்

தேசிய மட்ட வேலைத் திட்டங்கள்

- ✓ மகநெகும
- ✓ கமநெகும
- ✓ கெமிதிரிய / திவிநெகும
- ✓ நெசனல (2 புள்ளி)

இ) சமூர்த்தி வேலைத் திட்டத்தின் குறைபாடுகள்

- பயனாளிகளை தெரிவுசெய்தல் சரியான முறையில் இடம்பெறாமை
- நாட்டின் வறியமக்களின் சதவீதம் 8.9% என அறிக்கைப்படுத்தப்பட்ட போதும் சனத்தொகையில் 30% ஆனோர் சமூர்த்தி உதவி பெறுகின்றனர்.
- பயனாளிகளைத் தெரிவு செய்யும்போத அரசியல் தலையீடுகள் காணப்படுதல்
- நிறுவனக் கட்டமைப்பிலுள்ள குறைபாடுகள் (மிகப் பெரிய நிர்வாகக் கட்டமைப்பு காரணமாக அதிக செலவைத் தாங்க வேண்டி ஏற்படல்)
- சமூர்த்தி வேலைத் திட்டத்தின் பல்வேறு செயற்திட்டங்களுக்கும் இடையிலான தொடர்பாடல் பலவீனமடைதல்
- வேலைத்திட்டத்தை நிலைத்து நிற்கும் வகையில் நடாத்திச் செல்லும் ஆற்றல் பலவீனமடைதல் (அரச அணுசரனை மீது தங்கியிருத்தல்)
- ✓ தங்கியிருக்கும் கலாச்சாரமொன்று உருவாகியிருத்தல் (2 புள்ளி)
-